DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 412 / 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : பாஸ்கர். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2023.

1 2 4 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது, தூத்துக்குடி மாவட்டம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். 30.08.2015 ஆம் வருடம் உசிலம்பட்டி காவல் துணைக் காண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்படி நானும் பிரேம்குமாரும், கண்வாய் பட்டியில் ஒரு நபரை தேடிச் செல்லும்போது கண்வாய்ப் பட்டி விலக்கு, ஈஸ்வரன் கோவில் அருகே சில நபர்கள் தகராறு பண்ணிக்கொண்டிருந்தார்கள். உசிலம்பட்டி

விருமாண்டித்தேவர் மகனுடன் தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அப்போது பிரேம்குமார் காவலர் என்ன சத்தம் என்று விசாரித்துக்கொண்டிருந்தார். எல்லோரும் போதையிலிருந்தார்கள். அவர்கள் நாங்கள் வக்கீல் என்று சொல்லி பிரேம்குமாரை அடித்தார்கள். நான் போய் விலக்கிவிட்டேன். நிறைய பேரும் விலக்கினார்கள். பின்னர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை - இல்லை.

Sd / Thiru. P.S. ரஸ்கின் ராஜ், 13.10.23.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 412 / 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : சதீஸ். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2023.

1 2 4 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் உசிலம்பட்டி கருப்புக் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். 30.08.2015 ஆம் தேதி பாரதியும் நானும் எழுமலை வரை விசேசத்திற்கு சென்றுவிட்டு பைக்கில் வந்துகொண்டிருந்தோம். கணவாய்கேட்டில் சண்டை நடந்துகொண்டிருந்தது. நானும் பாரதியும் விலக்கிவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை - இல்லை.